தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84
தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்
எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601

மாநிலத் தலைவர்
மு.சுப்பிரமணியன்

பொதுச் செயலாளர்
மு.அன்பரசு

மாநில துணைத் தலைவர்கள்
ந.குமாரவேல்
ஆ.செல்வம்
எஸ்.தமிழ்ச்செல்வி
சு. பார்த்திபன்
மொ.ஞானத்தம்பி
மு.சுப்பிரமணியன்

மாநிலப் பொருளாளர்
எம்.தங்கராஜ்

மாநிலச் செயலாளர்கள்
இரா. பன்னீர்செல்வம்
சி.ஆர். இராஜகுமார்
என். ஜனார்த்தனன்
தி. கலைசெல்வி
எம். சௌந்தரராஜன்
ஏ. பெரியசாமி

**ஊடகச்செய்தி எண்.9/2017** **நாள்.16.03.2017**

# <u>ஊடகச் செய்தி</u>

## <u>ஊரக வளர்ச்சித்துறை இயக்குநரின் தொலைநகல் உத்தரவை உடனே திரும்பப் பெறுக. போராட்டகளம் போர்க்களமாவதை தவிர்த்திடுக!</u>

ஊரக வளர்ச்சித்துறையில் ஊரகச் செயலாளர் முதல் உதவி இயக்குநர் வரையிலான பல காலிப் பணியிடங்கள் நீண்டகாலமாக நிரப்பப்படாமல் காலியாக விடப்பட்டுள்ளன. இதனால் சொல்லொணா பணிச்சுமையில் ஊழியர்கள் அவதிப்பட்டு வருகின்றனர். ஏற்கெனவே உள்ள பணிச்சுமையுடன், உள்ளாட்சிப் பணியிடங்கள் அனைத்தும் காலியாக உள்ள நிலையில் கூடுதல் பணிச்சுமையாக மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டிய பெரும் பொறுப்பு ஊரக வளர்சித்துறை ஊழியர்களுக்கு உள்ளது. இத்துடன் இத்துறையில் பணியாற்றும் ஊராட்சி செயலாளர்களுக்கு காலமுறை ஊதியம், ஊதிய மாற்றம் போன்ற பலவகை கோரிக்கைகளை முன்னிறுத்தி பல போராட்டங்களை இவர்கள் நடத்திய பின்பு அரசுத்தரப்பில் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டு சில முக்கிய கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக அரசு அறிவித்து அவற்றை வழங்காமல் காலம்கடத்தியதால் வேறு வழியின்றி இவர்கள் போராட்டங்களை முன்னெடுக்க நேர்ந்தது. அரசானது சாத்தியமற்ற இலக்குகளைத் திணித்து போதிய அவகாசம் வழங்காமல் எல்லை மீறி தொல்லை தந்த வண்ணம் இருப்பதால் அவைபற்றி அரசுத்தரப்பினரிடம் ஊழியர் சங்கத் தலைவர்கள் முன்வைத்தும் அரசு பாராமுகமாக இருந்ததால் அவர்கள் தங்களது நியாயமான உரிமைக்காக போராட்டங்களை அறிவித்து அப்போராட்டமானது 14.3.2017 ஆம் தேதியிலிருந்து காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டமாக மாறியது.

எப்போதும் போல் வேடிக்கை பார்த்த அரசு இபோதும் காலவரையற்ற போராட்டம் தொடங்கும் வரை கண்மூடி இருந்துவிட்டு போராட்டம் தொடங்கியதும் பேச்சு வார்த்தைக்கு அழைத்து கபட நாடகத்தை தொடங்கியது. எதையுமே ஏற்கப்போவதில்லை என்ற நிலைப்பாட்டில் இருந்த அரசு ஊரக வளர்ச்சித்துறை சங்க நிர்வாகிகள் எடுத்துவைத்த எல்லா கோரிக்களையும் நிதி இல்லாமையை காரணம் காட்டி கைவிரித்துள்ளது. ஊராக வளர்ச்சித்துறை நிர்வாகிகளும் தொடர்ந்து மூன்றாவது நாளாக அரசு அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தி வரும் சூழலில் அதன் இயக்குநர் இன்று (16-03-2017) திடீரென ஒரு தொலைநகல் உத்தரவை அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (வளர்ச்சி)க்கு அனுப்பி, வேலை நிறுத்தத்தில் ஈடுபடும் ஊழியர்கள் மீது, அரசு ஊழியர் நடத்தை

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84
தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்
எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601

விதிகள், 1973ல் பிரிவு 22 மற்றும் 22(அ) வின் படி நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைள் குறித்த தகவல்களை இன்று (16-03-2017) மாலைக்குள் அனுப்பி வைக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளார். அரசின் இந்த ஊழியர் விரோத நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

பொய்யான உறுதிமொழிகள் கொடுத்து காலம் கடத்துவதும், ஒப்புக்கொண்ட கோரிக்கைகளை நிறைவேற்ற முறையிட்டால் வாளாயிருப்பதும், போராட்டத்திற்குள் புகுந்தால் வாளெடுத்து வீசுவதும் அறுவெறுக்கத்தக்க அதிகார வர்க்க அரசியலின் அடிப்படை சித்தாந்தமாக மாறியுள்ளது. உரிமைக்காக போராடும் ஊழியர்களை நடத்தை விதிகளைக்காட்டி நசுக்கப் பார்ப்பதும், முறையான பல கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக ஒப்புக்கொண்டு கொடுத்த வாக்கிலிருந்து வழுவி நிற்கும் அரசாங்கத்தை எதிர்த்து போரிட்டால் அதிகாரத்தை சுழற்றுவதும் நல்ல அரசுக்கு அழகல்ல.

நன்னடத்தை விதிகள் அல்ல, எஸ்மா, டெஸ்மா போன்ற ஏராளமான அடக்குமுறை சட்டங்களை எதிர்த்து நின்றவர்கள் அரசு ஊழியர்கள் என்பதை இந்த அரசுக்கு நினைவுகூற விரும்புகிறோம். 2003ம் ஆண்டு இதேபோன்றதொரு நிலை தோன்றியபோது அதை எதிர்த்து நின்றதும், ஒரே அரசாணையில் 1,76,000 ஊழியர்களின் வேலை வாய்ப்பு பறிக்கப்பட்டபோதும் அதை உடைத்து வெற்றி கண்டதும் இதே அரசு ஊழியர்கள் தான் என்பதையும், அரசு ஊழியர்களை பந்தாடிய அரசை, மக்கள் மன்றத்தில் மண்டியிட வைத்து மண்ணைக் கவ்வ வைத்ததும், மண்ணைக்கவ்விய ஆட்சி ஐந்து ஆண்டுகளுக்குபின் மீண்டும் ஆட்சியமைத்த போது அரசு ஊழியர்களை அழைத்து அவர்கள் கோரிக்கையை நிறைவேற்றிய வரலாற்றை நிகழ்த்திக் காட்டியதும் இதே அரசு ஊழியர்கள்தான் என்பதையும் ஆள்பவர்கள் கொஞ்சம் தெரிந்து வைத்துக் கொள்வது நல்லது.

நடத்தை விதிகள் பாயும், நடவடிக்கைகள் சீறும் போன்ற பூச்சாண்டி வேலைகள் காட்டுவதை ஆட்சியாளர்கள் நிறுத்திக் கொண்டு, ஊழியர்களின் பிரச்னைகளை உண்மையான உள்ள சுத்தியோடு பேசி, உரிய முடிவுகள் எடுப்பதே மக்கள் நலனில் உண்மையான அக்கரை கொண்ட அரசுக்கு அணி சேர்க்கும். நடத்தை விதிகளின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற சுற்றறிக்கையை ஊரக வளர்ச்சித்துறை இயக்குநர் உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என்று தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வலியுறுத்துவதோடு, அந்த சுற்றறிக்கையின் பேரில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டால் தமிழகத்தில் பிற அரசுத்துறைகளில் உள்ள ஊழியர்களும் ஊரக வளர்ச்சித் துறை ஊழியர்களுடன் போராட்டகளம் புக வேண்டி வரும் என்றும் எச்சரிக்கிறோம். போராட்ட களத்தை போர்க்களமாக மாற்ற ஆட்சியாளர்கள் முனைவார்களேயானால் அதையும் எதிர்கொள்ள தமிழகத்தின் அனைத்து அரசுத்துறை ஊழியர்களும் தயாராகவே உள்ளோம் என்பதையும் இந்த அரசுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம். எனவே அரசு இனியும் காலம்தாழ்த்தாமல், போராடும் ஊழியர்களின் பிரச்னைகளை உண்மையான அக்கரையோடு அணுகி உடனடி தீர்வுகள் காண வேண்டும், அன்றின் போராட்டகளம் போர்க்களமாவது தவிர்க்க இயலாததாகிவிடும்.

(மு.அன்பரசு)
பொதுச் செயலாளர்